(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 112/2019 அ.சா.11

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பாலாஜி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06.10.2025.

முதல் விசாரணை:-

நான் மருந்துகடை ஒன்றில் விற்பனை பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். நான் விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன நபர் என் அம்மாவின் தாயார். 16.06.2018ம் தேதி நான் விருதுநகரில் இருந்தேன். என் பாட்டி மாரியம்மாள் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டதாக என் சித்தி போனில் தகவல் சொன்னார். நான் வரும்போது இரவு 8 மணி இருக்கும். அப்போது பிரேதத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். போலீசார் வந்து கொலை நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். நான் அப்போது அங்கு இருந்தேன். என் சித்தப்பா ராஜகோபாலும் அப்போது அங்கு இருந்தார். அது சம்பந்தமாக அந்த கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். பார்வை

மகசர் **அ.சா.ஆ–8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் நான் சென்ற சுமார் ஒரு மணி நேரத்தில் அங்கு வந்தார்கள். நான் அன்று முழுவதும் அங்கு தான் இருந்தேன். என்னை போலீஸ் ஸ்டேசனுக்கு இரவு சுமார் 10 மணிக்கு மேல் கூட்டி போனார்கள். போலீஸ் ஸ்டேசனில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடம் எதையும் பார்வையிடவில்லை என்றும், வரைபடம் எதையும் தயாரிக்கவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல.

**Sd/-** பாலாஜி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.